| Published Date: | 28 Aug 2017 | Publication: | Dinakural |
|---|---|---|---|
| Edition: | Puducherry | Page No: | 3 |

# டாடா கன்சல்டன்சி சர்விசஸ் புதிர் போட்டியில் புதுவையை சேர்ந்த ஜெயகிருஷ்ணன் மற்றும் வேதபுரீஸ்வரர் வெற்றி

புதுச்சேரி, ஆக.29

இந்தியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப சேவைகள், ஆலோசனை மற்றும் வர்த்தகத் தீர்வுகள் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்விசஸ் நடத்தும் இந்தியாவின் மிகப்பெரிய பள்ளிகளுக்கு இடையிலான புதிர் போட்டியான - டாடா கன்சல்டன்சி சர்விசஸ் புதிர்போட்டியில் சென்னை பதிப்பில், 1250 - க்கும் மேற்பட்ட மாணவர்களின் பங்கேற்புடன், ஆகஸ்ட் 17 அன்று மியூசிக் அகாடமியில் நடைபெற்றது. 620 - க்கும் மேற்பட்ட அணிகளை வீழ்த்தி, கேந்திரய வித்யாலயா எண்.2, புதுச்சேரி பள்ளியைச் சேர்ந்த ஜெயகிருஷ்ணன் மற்றும் வேதபுரீஸ்வர் ஆகியோர் இதில் பிராந்திய வெற்றியாளர்களாக வெற்றிபெற்றனர். அவர்கள், இந்தியாவின் பிற 11 பிராந்திய அணிகளுடன், தேசிய அளவிலான இறுதிப்போட்டியில் போட்டியிடவுள்ளனர்

கடந்த 3 ஆண்டுகளாக, புதுச்சேரியைச் சேர்ந்த பள்ளிகள் சென்னைப் போட்டியில் பங்கேற்கின்றனர். கேந்திரிய வித்யாலயா எண்.2 புதுச்சேரி பள்ளி, 2016 சென்னை பதிப்பிலும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

5 சுற்றுகளாக நடந்த பிராந்திய இறுதிப்போட்டியில், பாண்டிச்சேரியில் உள்ளகேந்திர வித்யாலயா எண்.2 பள்ளியைச் சேர்ந்தது. ஜெயகிருஷ்ன் வேதபுரீஸ்வர் "பிராந்திய வெற்றியாளர்கள்" என தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் அவர்களுக்கு ரூ.60,000 மதிப்பிலான கிஃப்ட் வவுச்சர்கள் வழங்கப்பட்டன. இரண்டாம் இடம் பிடித்த சென்னை, செட்டிநாடு வித்யாஸ்ரம் பள்ளியைச் சேர்ந்த ஆதித்யா. மற்றும் ஹர்ஷ் யாதவ் ஆகியோருக்குக்கு ரூ.40,000 மதிப்பிலான கிஃப்ட் வவுச்சர்கள் பரிசாக வழங்கப்பட்டன. மேலும் 6 இறுதிச்சுற்று பங்கேற்பாளர்களுக்கு, பிரத்தியேக ஜிம்பேக், ஓடிஜி பென் டிரைவ், இயர்ஃபோன்கள் மற்றும் புளூடூத் ஸ்பீக்கர்கள் பரிசுகளாக வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற அணிக்கு ஒரு பெற்றோர் மற்றும் ஆசிரியருடன், தேசிய இறுதிப்போட்டிகளுக்கு மும்பைக்கு விமானத்தில் செல்லும் வாய்ப்பு வழங்கப்படும்.




பெண்மையிகு வருவாய்
கோட்டாட்சியர் அவர்கள் :-
சமூகம். கள்ளக்குறிச்சி
விழுப்புரம் மாவட்டம்
பி.இ.சி.ப.வ.அ6
எண்/3324/2017
வடிவேல் முருகன்
S/O அர்ச்சனன்
பாலனகம் ரோடு